**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**

**FAST TRACK COURT, ARANI.**
**S.C.No.125/2018**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.4** |
| **Name** | **:** | **திரு.முருகன்** |
| **Father's Name** | **:** | **இரத்தினம்.** |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**1,2,4 முதல் 8 எதிரிகள் ஆஜர்.**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 07.06.2023.**

**முதல் விசாரணை -**

**நான் கொண்டையாங்குப்பம் கிராமத்தில் வசிக்கிறேன். தற்போது விவசாயம் செய்து வந்தேன். அப்போது ஆட்டோ ஓட்டி வந்தேன். அ.சா.1 - ஐ தெரியும் ஆஜர் எதிரிகளை தெரியும். இறந்த கண்ணனை தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை.**

**இந்த வழக்கு சம்பந்தமாக என்ன தெரியும் என்றால் சுமார் 12 வருடம் முன்பு இரவு 7 மணி அளவில் அ.சா.1, அவருடைய மனைவி மற்றும் இரண்டு பேரை நான் ஆட்டோவில் வந்தவாசி அரசு மருத்துவமனைக்கு**

அழைத்துச் சென்றேன். செல்வராஜ் என்னை போன் பண்ணி அழைத்ததில் சவாரியில் இருந்து நான் வந்தேன். அவர்கள் ரோட்டில் இருந்தார்கள். அவர்களை அழைத்துச் சென்றேன்.

சாட்சி விசாரணை வாக்குமூலத்திற்கு பகுதிக்கு எதிராக சாட்சியம் அளித்ததால் சாட்சியை பகுதி குறுக்கு விசாரணை செய்ய கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

<u>அரசு தரப்பு பகுதி குறுக்கு விசாரணை</u>

அருங்குணம் கூட்ரோடு சாலையில் இருந்து அழைத்துச் சென்றேன். அடிப்பட்டது என்பதை நான் பார்த்தேனா என்றால் நான் பார்க்கவில்லை. அழைத்துச் செல்ல சொன்னதால் அப்படியே அழைத்துச் சென்றுவிட்டேன். நான் ஆட்டோவில் ஏற்றும்போது ஆட்டோவில் வந்த நபர்கள் எப்படி இருந்தார்கள் என்றால் அழுதுக்கொண்டு இருந்தார்கள்.

என்னுடைய ஆட்டோவில் எத்தனை பேர் போக முடியும் என்றால் 6,7 பேர் போக முடியும். ஷேர் ஆட்டோ. என்னுடைய ஆட்டோவில் சீட் அரேஜ் பண்ணி கொடுத்தேனா என்றால் சீட் காலியாக இருந்ததால் ஏறிகொண்டார்கள். நான் ஆட்டோவை ஆப் செய்யவேயில்லை. ரன்னிங்கிலேயே ஏறிக்கொண்டார்கள். ஏறியவர்களில் எனக்கு அ.சா.1 மற்றும் அவருடைய மனைவியை தவிர மற்றவர்களை தெரியாது. ஆட்டோவின் இரண்டு பக்கமும் சைடு கண்ணாடி உள்ளது.

இரண்டு பக்க சைடு கண்ணாடியில் பின்னால் அமர்ந்திருப்பவரை பார்க்குமாறும் அமைந்திருக்கும் என்றால் ரோடு வியு தான் தெரியும். வந்தவாசி அரசு மருத்துவமனைக்கு இரவு 8 மணி இருக்கும் கொண்டு போய் சேர்க்கும்போது. அவர்கள் இறங்கியவுடன் நான் உடனே வந்துவிட்டேன்.

அ.சா.3 மகாலிங்கத்தை தெரியும்.

போலிசார் என்னை விசாரித்தபோது மகாலிங்கத்தை அ.சா.1 கூப்பிடும்போது நானும் உடன் சென்றபோது சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. போலிசார் விசாரிக்கவில்லை. மேலும் மகாலிங்கம் ஓட்ட சென்றபோது, எதிரி கிருஷ்ணன் கண்ணனின் தலையில் கத்தியால் வலது இடது பக்க தலையில் வெட்டியது குறித்தும், மாரிமுத்து இரும்பு பைப்பால் கண்ணனை அடித்தது குறித்தும், தடுக்க வந்த செல்வராஜை மாரிமுத்து கிருஷ்ணனிடம் இருந்து கத்தியை பிடுங்கி செல்வராஜின் இடது விரலிலும், இடது மண்டையிலும் தாக்கியதையும், பெண் எதிரிகள் குமாரி மற்றும் லட்சுமி தேவி அம்மாளை தாக்கியபோது நான் அருகில் இருந்து தடுத்தேன் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் எனக்கு வேண்டியவர்கள் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

1,2 மற்றும் 4 முதல் 7 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லையென எடுத்துரைக்கப்பட்டது.

8ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லையென எடுத்துரைக்கப்பட்டது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.